விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 189 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 12 வெள்ளிக்கிழமை (26.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அமெரிக்காவில் பதுங்கியுள்ள பசில் விரைவில் கைதாவார்

### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தற்போது அமெரிக்காவில் பதுங்கியுள்ள பசில் ராஜபக்ஷ விரைவில் கைதாவார் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் 15ஆம் பக்கம் பார்க்க



## பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த ஆண்டுக்குள் இரத்து

### பாராளுமன்றில் ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாகப் பெரும் சர்ச்சைகளுக்கும் சர்வதேச விமர்சனங்களுக்கும் உள்ளாகி வரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) இன்னும் சில மாதங்களுக்குள், அதாவது இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்து செய்யப்படும் என்று ஜனாதிபதி அநுர 15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் விபரீத முடிவெடுத்த

## 17 வயது இளம் தவில் கலைஞன் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெடுத்த இளம் தவில் கலைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

### வெனிசுலாவில் நிலநடுக்கம்

## 188 பேர் உயிரிழப்பு



15ஆம் பக்கம் பார்க்க

# குற்றங்கள் செய்த எவரும் தப்ப முடியாது

### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர

- ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.
- சட்ட நடவடிக்கைகளை அரசியல் பழி வாங்கல் என்று குறிப்பிடவேண்டாம்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வரி செலுத்துநர் இலக்கம் (TIN) பெற கால வரையறை விதிக்கப்படவில்லை

### யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) பெற இதுவரை காலவரையறை விதிக்கப்படவில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 02ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி மருத்துவமனையில்

## இலவசமாக ஆரம்பிக்கப்பட்ட செயற்கை முறை கருக்கட்டல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச மருத்துவத்துறை வரலாற்றிலேயே முதற்தடவையாகக் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'செயற்கை முறை கருக்கட்டல்' (ஐ.வி.எவ்.) சேவையின் முன்னேற்றங்கள் மற்றும் அதற்கான அத்தியாவசியத் தேவைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் 15ஆம் பக்கம் பார்க்க

### மண்டைதீவில் சர்வதேச

## கிரிக்கெட் மைதானம் அமைக்க வாய்ப்பில்லை

### இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான வாய்ப்பு தற்போது இல்லை என இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் பிரகாஷ் ஷாஃப்டர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் 02ஆம் பக்கம் பார்க்க

### ஜூலை 16ஆம் திகதி

## ஜனாதிபதி அநுர பிரான்ஸ் விஜயம்

(பாரிஸ்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி பிரான்ஸுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது 15ஆம் பக்கம் பார்க்க

## விஜயதாசவின் மகன் உட்பட மூவர் கைதாகி மறியலில்

(கொழும்பு)



முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் ரக்கித ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரணை தொகுதி அமைப்பாளர் சரித் அபேசிங்க உட்பட மூவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூத்த பத்திரிகையாளர் திருச்செல்வம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் மூத்த பத்திரிகையாளர் ஏ.என். எஸ். திருச்செல்வம் நேற்று வியாழக்கிழமை (25) புலோலி, புற்றளையில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 74.



இவர் கடந்த 1975 ஆண்டு காலப்பகுதியில் லேக்கவுஸ் நிறுவனத்தின் வெளியீடான தினகரன் பத்திரிகையில் பருத்தித்துறை குறூப் நிருபராக இணைந்து கொண்டார்.

தொடர்ந்து 1977 ஜூன் மாதம் முதல் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டார். பின்னாளில் வலம்புரிப் பததிகையின் செய்தியாளராகவும் கடமையாற்றினார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் பொது நூலகராக கடமையாற்றிய அவர் கலாபூஷணம், கலைப்பருதி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

சுமார் 45 ஆண்டு காலம் பத்திரிகைச் செய்தியாளராகப் பணியாற்றிய திருச்செல்வம் தனது சேவைக்காலத்தில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். (ந-7,60)


பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S. றோட், சுன்னாகம்.

BARATHY

பிரதான வீதி, சிவன்கோவில் அருகில், சித்தன்கேணி.

A/L 2028

கலை, வர்த்தகப் பிரிவு

நாளை புதிய பிரிவு 27.06.2026 சனி

உங்கள் உயர் பெறுபேறுகளுக்கு வழிகாட்டும் பேராசான்கள்

வர்த்தகப் பிரிவு

பொருளியல் - R.தர்ஷன்

கணக்கீடு - S.திருக்குமரன்

வணிகக்கல்வி - S.பிரதீபன்

ICT - T.சுதர்ஷன், T.தேவதர்ஷன்

கலைப்பிரிவு

தமிழ் - N.சத்தியவேந்தன்

புவியியல் - P.S.குமரன், K.ரஜீவன்

ஊடகவியல் - N.கஜீதரன்

அரசியல் - S.கோகுலன்

கிறிஸ்தவ நாகரிகம் - A.யுபின்சன்

இந்து நாகரிகம்/ இந்து சமயம் - P.ஜோதீஸ்வரன், A.மேனன், S.முகுந்தன்

அளவையியல் - S.சயந்தன், N.ஜெயசுரேஸ், ES.பவன்

நாடகமும் அரங்கியலும் - P.கோபிநாத், P.துவாகரன்

மனைப்பொருளியல் - S.றஜிதா

சங்கீதம் - S.குமுதினி

சித்திரம் - S.சபேசன்

வரலாறு - S.ஷஜீவன்

உங்கள் அனுமதிகளை மூன்று நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

(C-5925)

யாழ்.நகர் - 077 2209651, சுன்னாகம் - 075 9160417, சித்தன்கேணி - 0771692446

Director - 077 376 3511


## விஜய...

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக்கவை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவுகளிலிருந்து நீக்கி, வேறொரு சிறைச் சாலைக்கு மாற்றுவதற்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கி அவரை சாதாரண கைதியாக தடுத்து வைப்பதற்கும் 1,200 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அருண வருசவிதான கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர்களை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர்களை எதிர் வரும் 3ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-7)

## வரி செலுத்து...

யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் அண்மைய நாட்களாக காலையில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் தினமும் நிற்பது தொடர்பாக, அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் நேற்று (25) அவ் அலுவலகத்தின் பிராந்திய ஆணையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

மேற்படி கலந்துரையாடியதற்கு அமைவாக பின்வரும் விபரங்களை பொதுமக்களுக்கு அரசாங்க அதிபர் தெரியப்படுத்தியுள்ளார்.

01.வரி செலுத்துநர் அடையாள இலக்கமானது (TIN) யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என எவ்விதமான காலவரையறையும் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

02.வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. அவ்வாறு கட்டணம் செலுத்துவதோ அல்லது பெற்றுக் கொள்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

03.ஏற்கெனவே வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் உரியவர் தனது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்து வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

04.வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின் நிகழ்நிலை (Online) முறைமை மூலமாகவோ அதாவது www.ird.gov.lk அல்லது உள்நாட்டு இறைவரித் திணைகளத்தில் உரிய விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சமர்பிப்பதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். தற்போது பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கான TIN சான்றிதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

05.மேலதிக விபரங்களுக்கு 0212217333 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிய முடியும்.

எனவே மேற்படி விபரங்களுக்கு அமைய, பொதுமக்கள் எதுவித பீதியும் அடையத் தேவையில்லை என அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7,33,104)

## கிரிக்கெட்...

மேலும் தெரிவிக்கையில்,

நிதிக்கு ஏற்ப கிரிக்கெட் சபை அதன் நோக்கத்தை மறுமதிப்பீடு செய்து வருவதால், இத்திட்டம் மீளாய்வில் உள்ளது. தற்போது இத்திட்டம் செயற்பாட்டில் உள்ளது. நாங்கள் விரும்பும் திட்டத்தின் இறுதி நோக்கத்தை மீளாய்வு செய்ய வேண்டும். ஏனெனில், முதலில் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் இலங்கைக் கிரிக்கெட் சபையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது என்றும், அதை நிறைவு செய்வதற்குத் தேவையான தற்போதைய நிதி பலம் எங்களிடம் இல்லை என்றும் நாங்கள் மீளாய்வு செய்துள்ளோம்," என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கை கிரிக்கெட் சபை உறுதியாக உள்ளது.

ஆனால் திட்டத்தின் அளவு கணிசமாகக் குறைக்கப்படும். யாழ்ப்பாணத்தில் ஒரு கிரிக்கெட் மைதானம் அமைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம், ஆனால் எங்களது தற்போதைய நிதித் திறன்களுக்கு ஏற்ப யாழ்ப்பாணத் திட்டத்தில் எந்த அளவிற்கு முதலீடு செய்ய விரும்புகிறோம் என்பதை மீளாய்வு செய்து வருகிறோம்.

புதிய சர்வதேச கிரிக்கெட் மைதானம் கட்டுவதற்குத் தேவையான நிதி ஆதாரங்கள் தற்போது வாரியத்திடம் இல்லை.

யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முதலீடு செய்வதற்கு இந்த நேரத்தில் எங்களிடம் நிதி இருப்பதாக நான் நினைக்கவில்லை" என்றும் அவர் கூறினார். (ம-7)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378, 076 097 3127



புதிய பிரிவுகள்

A/L 2028

தமிழ்

N.சத்தியவேந்தன்

(B.A (Hons) Tamil Special, M.Phil in Tamil

(யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னால் உதவி விரிவுரையாளர்)

உங்கள் உயர் பெறுபேறுகளுக்கு

புதிய வகுப்புகள் ஆரம்பம் :- 28.06.2026 ஞாயிறு

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்

பொருளியற் கல்லூரி - சுன்னாகம்

BARATHY - சித்தன்கேணி

அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்

(C-5924)



கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமூகவலுவூட்டுகை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி.சியாமளா தாரகன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **பாலு சின்னத்துரை**

அவர்கள் 24.06.2026 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 14.10.1949 மறைவு 24.06.2026

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-5918)



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவர் திருமதி **பேர்ட்டிபனிஸ்ரர் அருட்செல்வி** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் சிவகாமசுந்தரி அருளையா

தோற்றம் 18.10.1945 மறைவு 19.06.2026

அவர்கள் 19.06.2026 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம் யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

(C-5915)


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## எரிபொருள் மானியத்துக்காக 57 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

### சபையில் வலுசக்தி அமைச்சர்



(கொழும்பு) எரிபொருள் மானியத்துக்காக 57 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக நேற்று பாராளுமன்ற அமர்வில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய கிழக்கின் நிலைமை முழுமையாக சீராகவில்லை. மசகு எண்ணெய் விலை நிலையற்றதாகவே காணப்படுகிறது. ஆகவே எரிபொருள் விலைக் குறைப்பு தொடர்பில் உறுதியாக அறிவிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

## செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படும்

### அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி

**(கொழும்பு) செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தின் உண்மை எப்போது வெளிவரும் என்று மக்கள் எதிர்பார்த்துள்ளார்கள் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**




இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக எதனையும் மறைக்கவும் எவரையும் பாதுகாக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை.

செம்மணி விவகாரம் குறித்து சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வோம். அத்தோடு, உண்மையை வெளிப்படுத்துவோம் என்று மேலும் தெரிவித்தார். (நி)

## டெங்கு நோயுடன் சேர்த்து சிக்குன்குனியாவும் பரவல்



(கொழும்பு) டெங்கு நோயுடன் சேர்த்து சிக்குன்குனியா நோயும் தற்போது தலைதூக்கியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் கபில கண்ணங்கர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் டெங்கு நோய்த்தாக்கமானது தற்போதைய நிலையில் எதிர்பாராத விதமாக அதிகரித்து வருவதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களில் இந்த நிலைமை மிகவும் தீவிரமாக அவதானிக்கப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் பதில் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (நி)

### நெல்கொள்முதல் விலையை உயர்த்தினால்

## அரிசி விலையும் உயரும்

### அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் விலையை 150 ரூபாவாக உயர்த்தினால், அதற்கு இணையாக அரிசி விலையையும் அதிகரிப்பதற்கு நெல் ஆலை உரிமையாளர்கள் எதிர்பார்த்திருப்பதாக விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்கு நெல்லைக் கொள்முதல் செய்வதில் தற்போது சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் நெல் கொள்முதல் செய்யும் விலையை அதிகரிப்பதா? அல்லது அவர்களுக்கு வேறு ஏதேனும் நிவாரணம் வழங்கும் முறையை உருவாக்குவதா? என்பது குறித்து சிக்கல் நிலவுகிறது.

நெல் விலையை 150 ரூபா வரை கொண்டு சென்றால், அரிசி விலையை அதிகரிக்க ஆலை உரிமையாளர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நடந்தால் பொது நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படும். இப்படியொரு பிரச்சினை இங்கு உள்ளது.

எனினும், விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்திச் செலவுக்கு நிகரான விலையை வழங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே நாங்கள் செயற்பட்டு வருகிறோம். அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு நெல்லுக்கான கேள்வி 2.8 மில்லியன் மெற்றிக் தொன்னாக காணப்படுகின்ற நிலையில் 2.85 மில்லியன் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் போதுமான நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நிலையில், வரையறுக்கப்பட்ட நிலையில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே 2026 ஆம் ஆண்டு அரிசிக் கான தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அமைச்சர் லால் காந்த தெரிவித்தார். (நி)

### தேசிய போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை

## ஒரே நாளில் 827 கைது



(கொழும்பு) முழு நாடும் ஒன்றாக - தேசிய செயற்பாடு என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப் பொருள் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விநியோகத்தை வலுவிழக்கச் செய்தல், போதைப்பொருளுக்கான தேவையை இல்லாமல் செய்தல், நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், அதன் பயன்பாட்டை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கமைய 827 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 827 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட 12 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், 9 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 3 பேருக்கு எதிராக சட்டவிரோத சொத்து குவிப்புத் தொடர்பில் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி)

## மிகுந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு மட்டுமே அஸ்வெசும

(கொழும்பு) இனிவரும் காலங்களில் அஸ்வெசும நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை, மிகுந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப் படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அஸ்வெசும நலத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் இந்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், அதற்கான பயனாளிகளின் தரவுகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அஸ்வெசும திட்டத்தின் கீழ் 2023இல் [illegible] பிரிவுகளின் அடிப்படையில் சுமார் 16 இலட்சம் மக்கள் உதவித்தொகை பெற்றிருந்தனர். எனினும், கடந்த ஏப்ரல் மாதம் இடைக்காலப் பிரிவில் இடம்பெற்றிருந்த 3 இலட்சத்து 15 ஆயிரம் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன. அதேவேளை, இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் நலிவடைந்த மக்களுக்கான மூன்றாவது பிரிவில் இடம்பெற்றிருந்த 4 இலட்சத்து 25 ஆயிரம் பயனாளிகளுக்கான நிவாரண உதவித் தொகையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த இரு பிரிவுகளிலும் இடம்பெற்றுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் மீண்டும் மதிப்பீட்டின் அடிப்படையில் அஸ்வெசும உதவித்தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் உதவி ஆணையாளர் அஷான் தர்ஷக தெரிவித்துள்ளார்.

புதிய தரவு சரிபார்ப்பு மற்றும் தகுதி மதிப்பீட்டின் மூலம் உண்மையில் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு நலத்திட்ட நிதி சென்றடைவதை உறுதிப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

### பெண்களுக்கான நீளம் பாய்தல்

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயா தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது



வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான 16 வய திற்கு உட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் சுன் னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி. வைஸ்ணவி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைக ளுக்கு இடையிலான ஆண்கள் பெண்க ளுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியைப் பிரதிநி தித்துவம் செய்த பி. வைஷ்ணவி 5.09 மீற்றர் தூரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும் அதே கல் லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். திவ்யா 4.94 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் கற்கிடந்த குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. மெலின் மெடொனிக்கா 4.79 மீற்றர் தூரம் பாய்ந்து வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள் ளனர். (நி-90)

### ஆண்களுக்கான நீளம் பாய்தல்

## மன்னார் முருங்கன் ம. கல்லூரி தங்கத்தை தனதாக்கியது

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மன்னார் முருகன் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்து வம் செய்த வை. கிம்ரோன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண் களுக்கான மெய்வல்லுநர் போட்டி கள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரு கிறது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மன்னார் முருகன் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித் துவம் செய்த வை.கிம்ரோன் 6.71 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் மன்னார் சென் லூசியஸ் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. அருண் நிலக்சன் 6.51 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித் துவம் செய்த ஆர். சதீஸ் 6.31 மீற் றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக் கத்தையும் கைப்பற்றியுள்ள னர். (நி-90)



## ஈட்டி எறிதல் போட்டியில் தங்கத்தை கைப்பற்றியது சென். ஜோன்ஸ்



வடமாகாண பாடசாலைக ளுக்கு இடையிலான 20 வய திற்கு உட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. அபிஷன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைக ளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விள்ளயாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. அபிஷன் 49.7 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத் தையும் யாழ் இந்துக் கல்லூ ரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். ஹரிஹரன் 46.67 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத் தையும் பளை மத்திய கல்லூரி யைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர். எழில்பிரியன் 46.63 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக் கத்தை யும் கைப்பற்றியுள் னர். (நி-90)

## பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டம் மன்னார் சென். ஜோசப்பிற்கு தங்கம்

வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான 20 வய திற்கு உட்பட்ட பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் சென் ஜோசப் மகா வித்தியால யத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே. கிதுர்ஷிகா தங்கப் பதக் கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் சென் ஜோசப் மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த கே.கிருஷிகா தங்கப் பதக்கத்தையும் இள வாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்து வம் செய்த ஏ.அபிஷா வெள்ளிப் பதக்கத்தையும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித் துவம் செய்த ஜெ. ஓஷானா வெண்கலப் பதக்கத்தையும் கைப் பற்றியுள்ளனர். (நி-90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்- 2025

**யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை**

**9ஏ**

ஆர். ரஜீனா, ஆர்.ரமீனா, என்.ரஷனா, ஆர்.ரதுமினா, எ.சஹீரா, வி.ஸ்ரீஆராதனா, வி.தர்விகா, வி.திவ்வியலோயினி, கே. அனோயா, இ.கனீஸ்ரனா, யே.அஸ்விதா, எஸ்.பஹவானி, எஸ். சாகித்தியா, யி.வர்சா, எஸ்.திவேரா, ஆர்.ஜெனனி, ஆர்.சுவஸ்திகா, எ.மேரிசாளினி, பி.யதுஷா, வை.அஸ்வினி எஸ்.ஹம்சிகா, எம்.அன்பினி, என்.காவ்யா, எஸ்.நிதுறா, ஜே. சருசனா, பி.சுமித்ஷனா, ஆர்.வர்ணிகா.

**8ஏபி**

பி.திவ்யபிரபா, ஆர்.அஸ்வியா, எஸ்.அக்சயா, பி.கிருஷகீ, ரி.துவிதா, எம்.தர்மிகா, எ.டினுஜா, கே.ராகவீஹா, வை.அம்சவி, எஸ்.காவியா, பி.கிருஷாகினி, யு.அபிஸா, எம்.சயானிகா, பி.அனங்கவி, ஜே.அக்சயா, எஸ்.ஹம்ஸ்கரிணி

**8ஏசி**

யு.அக்ஸனா, எம்.கிஷாமிகா, எ.அக்ஷனா, கே.டினுஷி.

## கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தின் கற்றல்வள நிலையம் திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தின் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய கற்றல் வள நிலையக் கட்டடத் திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி வி.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை மாணவர்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கல்வி அமைச்சின் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் 21 மில்லியன் ரூபா செலவில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## வைத்தீஸ்வராக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்றம்



(யாழ்ப்பாணம்)

யா/ வைத்திஸ்வராக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை (23) பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

செயலாளர் நாயகம் பத்மநாதன் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் திருமதி. திரேசாமரியநாயகம் கலந்து கொண்டார். (8)

## கருத்தரங்கு

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக திறன்கள் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், கிளி/ மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 9 மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான பாடத்தெரிவு மற்றும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நேற்று பாடசாலை முதல்வரின் தலைமையில் நடைபெற்றது.

மாணவர்கள் தங்களின் எதிர்காலக் கல்விப் பாதையைச் சரியாகத் தேர்ந்தெடுப்பதற்கும், தற்காலப் போட்டி உலகிற்கு ஏற்ப சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்துறை சார்ந்த வாய்ப்புகளை அறிந்துகொள்வதற்கும் வழிகாட்டும் நோக்கில் இந் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர் களுக்கான ஆலோசனைகளையும் முறையான வழிகாட்டல்களையும் வழங்கினர். (8)

## வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளராக தாட்சாயினி நியமனம்




(வவுனியா)

வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி தாட்சாயினி வஜீகரன் பதவி உயர்வு பெற்று நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய இவர், பின்னர் வவுனியா தெற்கு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி வந்த நிலையில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளராக செயற்பட்டு வந்த து.லெனின் அறிவழகன் தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றலாகி சென்றுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (8-250)



வடமராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டு கூட்டுறவு சங்கத்தின் சிறு கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் விற்பனைச் சந்தை கரணவாய் செல்வாபுரம் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

## வடமராட்சி வலிகண்டிப்பகுதியில் சம்பு புற்களுக்கு தீ வைத்த விஷமிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் , வடமராட்சி கிழக்கு வலிகண்டி பகுதியில் வீதியோர சம்பு புற்களுக்கு விஷமிகள் தீ வைத்தமையால் , சில மணி நேர போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருந்தது.

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில் வலிக்கண்டி பகுதியில் வீதியோரமாக காணப்பட்ட சம்பு புற்களுக்கு விஷமிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தீ வைத்துள்ளனர்.

கடும் காற்று வீசி வரும் நிலையில் , வீதியோர புற்கள் தவிர்ந்து அருகில் வெளிகளில் காணப்பட்ட புற்தரைகளுக்கு தீ பரவியதால், பெருமளவான புகை மூட்டம் எழுந்து வீதியூடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் தண்ணீர் பவுசர் அழைக்கப்பட்டு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னரே வீதியின் ஊடாக பொது மக்கள் போக்குவரத்து செய்ய கூடிய நிலைமை ஏற்பட்டது. (8-33-60)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்!

(கரணவாய்)

தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமம் பாதயாத்திரையில் ஈடுபடும் யாத்திரிகர்களுக்கு மட்டக்களப்பு, வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் வைத்து சத்துமா பைக்கற்றுக்கள், பிஸ்கட் வகைகள் என்பன வழங்கப்பட்டன.

குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கிவைத்தார். (8-60)

## வவுனியாவில் இடம்பெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வு



(வவுனியா)

வடக்கு மாகாண விவசாய அமைச்சும், வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய உலக சுற்றாடல் தின நிகழ்வும் அறுவடை சஞ்சிகை வெளியீடும் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர கலந்து கொண்டார். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாமலுக்கு எதிரான கிரிஷ் வழக்கு
## வெளிநாட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகத் தொடரப்பட்ட 'கிரிஷ்' பரிவர்த்தனை தொடர்பான வழக்கில், இரண்டு இந்திய சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அதன்படி, வெளிநாட்டுச் சாட்சிகளுக்கான நீதிச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக்கு இணங்க அழைப்பாணையை அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவர்ந்துருகொட உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டிய இருவரைத் தொடர்புகொள்ள முடியவில்லை என்று குற்றப் புலனாய்வுத் துறை தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கையில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதாகக் கூறி, இந்தியாவின் 'கிரிஷ்' நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாயைப் பெற்றுக்கொண்டதன் மூலம் நாமல் ராஜபக்ஷ குற்றவியல் ரீதியான நம்பிக்கைத் துரோகத்தைச் செய்ததாகச் சட்டமா அதிபர் சுமத்திய குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (நி)

# ஜூலை 1 முதல் பேருந்து கட்டண திருத்தம்
## தனியார் பேருந்து சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

அதிகரித்து வரும் செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் தொழில்துறை சார்ந்த பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு, வருடாந்த பேருந்து கட்டண திருத்தத்தை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் அமுல்படுத்துமாறு தனியார் பேருந்து சங்கங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த கோரிக்கை அடங்கிய கடிதம் ஜூன் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பேருந்து கட்டண திருத்தம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் அடுத்த ஐந்து நாட்களுக்குள் கலந்துரையாடல்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாக' விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இந்த வருடாந்த கட்டண திருத்தத்தை ஜூலை 5ஆம் திகதி அமுல்படுத்த சங்கங்கள் உத்தேசித்திருந்த போதிலும், ஏனைய உறுப்புச் சங்கங்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, வழக்கமான நடைமுறையின்படி ஜூலை 1 ஆம் திகதியே இதனை அமுல்படுத்துமாறு கோருவதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த பேருந்து கட்டண திருத்தமானது பொதுவாக எரிபொருள் விலைகள் மற்றும் பிற செயற்பாட்டுச் செலவுகளைக் கணக்கில் கொள்ளும் ஒரு சூத்திரத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
/ -076 636 3378
E.mail: Valampurii@yahoo.com

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3373

### தர்மிகா




### யதுஷன்

டாக்டர்: வாயை திறவுங்க சார் தர்மாமீட்டரை வைக்கனும்...

பேஷண்ட் வாயைத் திறக்கல... பக்கத்தில இருக்கிற மனைவிய பார்க்கிறார்...

டாக்டர்: இந்தாம்மா! நீங்க கொஞ்சம் வெளியே போங்க உங்கள் கணவர் வாயைத் திறக்கவே மாட்டேன் என்கிறார்.


### தனுஜன்




### தேனுஜா




### குமுதினி




### ஆரிஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் வலம்புரியின் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படப் போகும் அபாயம்

## உலக உணவுத்திட்டம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் நேரடித் தாக்கங்கள் காரணமாக, இலங்கையில் மேலும் பல மில்லியன் மக்கள் தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.**



உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள புதிய பகுப்பாய்வு அறிக்கையின்படி, இந்த நெருக்கடியின் விளைவாக சில சந்தர்ப்பங்களில் மக்கள் கடுமையான பட்டினி நிலைக்குத் தள்ளப்படும் அபாயமும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடியின் பக்கவிளைவுகளால் தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் கடுமையான பட்டினி நிலைக்கு தள்ளப்படக்கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை மூன்றாம் இடத்தில் உள்ளது.

குறித்த பட்டியலில், ஆப்கானிஸ்தான் முதலிடத்திலும், சோமாலியா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்த நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் மேலும் 45 மில்லியன் மக்கள் வரை இவ்வாறான உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆபத்தில் உள்ளதாக உலக உணவுத் திட்டம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

# டெங்கு நுளம்பு பரவல்; 5000 பேருக்கு வழக்கு பதிவு

(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சுற்றாடலைப் பேணி வந்த சுமார் 5,000 பேருக்கு எதிராக இதுவரையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான தரப்பினரைக் கண்டறிவதற்கான விசேட சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அச்சங்கத்தின் பதில் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், டெங்கு நோயைத் தடுப்பதற்கும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, நேற்று முன்தினம் முதல் நாளை வரை விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் தரவுகளின்படி, டெங்கு நோய் காரணமாக இதுவரையில் 29 மரணங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன், இவ்வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 49,000 ஐயும் கடந்துள்ளது.

இவ்வாறு பதிவாகியுள்ள மொத்த நோயாளர்களில் 52 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், டெங்கு நோய் பரவலில் புதிய வகை பிறழ்வுகள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை என மருத்துவ நிபுணர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி)

# எண்ணெய் விலையில் கடுமையான வீழ்ச்சி

(வோஷிங்டன்)

ஹார்முஸ் நீரிணை வழியாக அதிக எண்ணிக்கையிலான எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் வெளியேறியதைத் தொடர்ந்து, பெப்ரவரி மாத இறுதியில் ஈரான் போர் தொடங்குவதற்கு முந்தைய நிலையை விட எண்ணெய் விலைகள் சரிந்துள்ளன.

அதன்படி, உலகளாவிய அளவுகோலாகக் கருதப்படும் பிரெண்ட் மசகு எண்ணெய் விலை நேற்று வர்த்தகத்தில் ஒரு பீப்பாய்க்கு 72.24 டொலர் என்ற குறைந்தபட்ச நிலைக்குச் சரிந்தது.

அதேநேரம், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் மசகு எண்ணெய் விலை, ஒரு பீப்பாய்க்கு 1.3 சதவீதத்திற்கும் மேல் சரிந்து, 69.41 டொலர்களாக குறைந்தது.

இது பெப்ரவரி 28 அன்று தெஹ்ரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவதற்கு முந்தைய நாளிலிருந்து எண்ணெய் விலையை விடக் குறைவானதாகும்.

ஈரானுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு பாதையை அமைத்து, அதனுடனான ஒப்பந்தம் இறுதியாக எட்டப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய ஜூன் மாத நடுப்பகுதியிலிருந்து மசகு எண்ணெய் விலை 20 சதவீதத்திற்கும் மேல் சரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


# INVITATION FOR BIDS (IFB)

# ZONAL EDUCATION OFFICE- VADAMARADCHY

(1)The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Zonal Education office-Vadamaradchy now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below

| S.N | Bid No | Name of the Work | Estimated Civil Cost LKR In Mn Without VAT | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Date | |
| 01 | NP/41/20/04/03/2026/CM/Works/02 | Construction of Retaining Walls Near to Risky Building. J/Nelliady Central College. | 4.892Mn | C8, C7 & C6 (Buildings) | 74,000.00 | 02.11.2026 | 84 |

[2].Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

[3].Interested eligible bidders may obtain further information from Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy [Email: acctvada@yahoo.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, 1st Mile Post, Pointpedro.

[4].Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule/ Bidding Data" of the Procurement Document.

[5].A complete set of Procurement Documents in English language may be purchased by Interested bidders on the submission of a written request to the address **Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, 1st Mile Post, Pointpedro from 26.06.2026 until 10.07.2026 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a **non-refundable fee of Three thousand, Rupees [ Rs 3,000.00 < 10 Mn of Estimated Civil cost]. The method of payment will be by cash.**

[6]. Bids must be delivered to the address **Chairman, Regional Procurement Committee, Zonal Director of Education,Zonal Education office-Vadamaradchy, 1st Mile Post, Point Pedro on or before 10th July 2026 and 15.30 Hrs.** Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7]. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8].The pre-bid meeting will be held on 03.07.2026 at 10.30 Hrs at the Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro. The address (es) referred to above is (are): Chairman, Regional Procurement Committee. Zonal Education office- Vadamaradchy,1st Mile Post, Point Pedro.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office-Vadamaradchy,**
**1st Mile Post, Pointpedro**

(C-5919)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கமேனி இறுதிச்சடங்கில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு ஈரான் அழைப்பு



(டெஹ்ரான்)

போரில் கொல்லப்பட்ட ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி யின் இறுதிச்சடங்கு நிகழ் வில் பங்கேற்குமாறு, இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடி க்கு ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷெஸ்கியான் முறைப் படி அழைப்பு விடுத்துள் ளார்.

அமெரிக்க - இஸ்ரேல் இணைந்து கடந்த பெப்ரவரி 28 இல் நடத்திய தாக்குத லில் மேற்காசிய நாடான ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

மேற்காசியாவில் நீடித்த போர்ச்சூழல் காரணமாக அவருடைய உடலடக்கம் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், ஜுலை மாதத் தில் பல நாட்கள், பல நக ரங்களில் இந்தச் சடங்கு களை நடத்த ஈரான் அரசு திட்டமிட்டுள்ளது.

ஜுலை 4 இல் தொடங்கி 9 ஆம் திகதி வரை இறுதிச் சடங்குகள் நடக்க உள்ளன. தலைநகர் டெஹ்ரான், புனித நகரான கோமில் இறுதி ஊர்வலங்கள் நடை பெறும்.

ஈராக்கின் புனித நகரங் களான நஜாப் மற்றும் கர்பலாவிலும் பிரார்த்தனை கூட்டங்கள் நடைபெறும். இறுதியாக, 9இல் கமேனி யின் சொந்த ஊரான மஷ் ஹாத் நகரில் உள்ள புகழ் பெற்ற இமாம் ரெசா தர்கா வளாகத்தில் உடலடக்கம் செய்யப்பட உள்ளது.

இந்தியா - ஈரான் இடை யேயான நட்புறவை பறை சாற்றும்விதமாக கமேனி இறுதிச்சடங்கில் பங்கேற்க இந்தியப் பிரதமருக்கும் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. (நி)

# வெனிசுலாவை உலுக்

- தரைமட்டமான கட்டடங்கள்
- 32 பேர் உயிரிழப்பு
- 700 பேர் காயம்
- உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அ

(கராகஸ்)

**வெனிசுலாவில் நேற்று அடுத்தடுத்து ஏற் பட்ட இரண்டு பயங்கர நிலநடுக்கங்கள் ஒட்டுமொத்த நாட்டையும் உலுக்கியுள்ளன.**


அடுத்தடுத்து 7.1, 7.5 என்ற ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்ச ரிக்கையும் விடுக்கப்பட் டுள்ளது.

கரீபியன் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள மோரோன் பகுதிக்கு மேற்கே சுமார் 28



கி நில எ வ ய து இ வ

## வெனிசுலாவுக்கு உதவத் தயார் இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

வெனிசுலா நிலநடுக்கத் தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு அனைத்து உதவி களையும் செய்ய இந்தியா தயாராக உள்ளதாக பிர தமர் நரேந்திர மோடி, நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

வெனிசுலாவில் அடுத் தடுத்து இரண்டு முறை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் அங்குள்ள கட்டடங்கள் பெருமளவில் சேதமடைந்தன. பெருமள வானோர் உயிரிழந்துள்ள துடன் மருத்துவமனை யிலும் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் அந் நாட்டு ஜனாதிபதி ரோட்ரிக்ஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட் டுள்ளதாவது:

வெனிசுலாவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கங் களால் உண்டான பேர ழிவு குறித்து ஆழ்ந்த வருத் தம் அடைகிறேன்.

இந்திய மக்களின் சார் பாக, வெனிசுலா அரசுக் கும் மக்களுக்கும், குறிப் பாகத் தங்கள் அன்புக்குரி யவர்களை இழந்த குடும் பங்களுக்கும் எனது ஆழ் ந்த இரங்கலைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். மேலும் இந்த இக்கட்டான நேரத் தில் பாதிக்கப்பட்ட அனை வருக்கும் நாம் உறுது ணையாக இருப்போம். இந்தியா தன்னால் இய ன்ற அனைத்து உதவி களையும் வழங்கத் தயா ராக உள்ளது என்று பிரத மர் மோடி குறிப்பிட்டுள் ளார். (நி)

## நேட்டோ கூட்டாளிகளால் நான் ஏமாற்றம் அடைந்தேன்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விசனம்

(வோஷிங்டன்)

ஈரானுக்கு எதிரான போரின்போது பல நேட்டோ நட்பு நாடுகள் ஆதரவளிக்க தவறி விட்டன. அவர்களது நிலைப்பாட்டால் நான் ஏமாற்றமடைந்தேன் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரி வித்துள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே ஆகிய இரு வரும் சந்தித்து பேசினர். அப்போது ட்ரம்ப் கூறியதாவது:

ஈரானுக்கு எதிரான போரின்போது பல நேட்டோ நட்பு நாடுகள் அமெரிக் காவுக்கு ஆதரவளிக்கத் தவறிவிட்டன.

நாங்கள் கைவிடப்பட்டோம். இந்த விடயத்தில் எங்களுக்கு எந்த உதவியும் தேவைப்பட வில்லை. முதல் வாரத்திலேயே நாங்கள் (ஈரானை) அடியோடு அழித்து விட்டோம், ஆனால் அவர்கள், "நாங்கள் உதவ விரும்புகிறோம்", என்று சொல்லி யிருந்தால் நன்றாக இருந்திருக் கும்.

. ஸ்பெயின் ஒரு கோரமான நாடு. ஸ்பெயின் படுமோசம். இத்தாலியால் நான் ஏமாற்ற மடைந்தேன். இங்கிலாந்தால் நான் ஏமாற்றமடைந்தேன். ஜேர்மனி மற்றும் பிரான்ஸால் நாங்கள் ஏமாற்றமடைந்தோம். அவர்களில் பெரும்பாலானோ ரால் நாங்கள் ஏமாற்றமடைந்துள் ளோம். அவர்கள் எதையும்

செ மா அ எ ம அ யி யி வ உ யு மி கி அ கி தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# க்கிய நிலநடுக்கங்கள்!



அச்சம்


கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 7.1, 7.5 என்ற ரிக்டர் அளவில் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெனிசுலாவில் சில நிமிட இடைவெளியில் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் தலைநகர் கராகஸில் கட்டடங்கள் இடிந்து விழுந்ததோடு, கரீபியன் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் பெரும் உயிர்ச்சேதமும் பரவலான அழிவும் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையத்தின்படி 32 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் 700 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது. (நி)

## 40 டிகிரி செல்சியஸை எட்டிய லண்டன் சுரங்க ரயில் நிலைய வெப்பநிலை



(லண்டன்)

லண்டன் நிலத்தடி ரயில் வலையமைப்பில் நேற்று முன்தினம் வெப்பநிலை கிட்டத்தட்ட 40 டிகிரி செல்சியஸை எட்டியது.

ஜூன் மாதத்தில் இது வரை பதிவான மிக வெப்பமான நாளாக அன்றைய தினம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஹாம்ப்ஷயரின் கோஸ் போர்ட்பகுதியில் 36.1 டிகிரி செல்சியஸ் என்ற தற்காலிக அதிகபட்ச வெளிப்புற வெப்பநிலை பதிவாகியுள்ளது.

ஒரே நாளில் நான்கு முறை வெப்பநிலை சாதனை முறியடிக்கப்பட்ட நிலையில், 1976இல் பதிவான 35.6 டிகிரி செல்சியஸ் என்ற முந்தைய அதிகபட்ச வெப்பநிலையை இது முறியடித்துள்ளது என்று தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தீவிர வெப்பம் குறித்து வானிலை முன்னறிவிப்பாளர்கள் பல சுகாதார எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

நாடு முழுவதும் நிலவும் கடும் வெப்பம் மற்றும் அதிக ஈரப்பதமான சூழலுக்கு மத்தியில், பல பாடசாலைகளும் அலுவலகங்களும் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. (நி)

## ால் தன் னம்



செலுத்த விரும்பவில்லை.

தங்களுக்கு எல்லாம் இலவசமாகக் கிடைக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். எனக்கு அவர் களின் விசுவாசம் மட்டும் போதும். எங்களுக்கு அவர்களின் பணம் தேவையில்லை, வேறு எதுவும் தேவையில்லை.

உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த இராணுவம் நம்மிடம் உள்ளது. உங்களுக்குத் தெரியும், நாங்கள் அவர்களுக்கு மிகவும் விசுவாசமாக இருக்கிறோம். நாங்கள் எப்போதும் அவர்களுக்காகப் போராடுகிறோம் என ட்ரம்ப் தெரிவித்தார்.

ஐரோப்பிய நட்பு நாடுகள் அமெரிக்காவிற்கு ஆதரவளிக்கத் தவறிவிட்டன என்ற கருத்தை நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட்டே நிராகரித்தார். அவர் கூறியதாவது:

ஈரான் அணுசக்தி திறனை பெற்று இருந்தால், பிராந்தியத்திற்கும் முழு உலகிற்கும் ஓர் அச்சுறுத்தலாக இருந்திருக்கும். அவர்கள் அணுசக்தித்திறனைப் பெறுவதற்கு மிக அருகில் இருந்தனர்.

இந்த அணுசக்தித் திறன் செயலிழக்கச் செய்யப்பட்டதை ஜி7 நாடுகளின் தலைவர்கள் அனைவரும் பாராட்டியதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இந்தப் போர் நடந்த ஆறு வாரங்களில் ஐரோப்பாவில் உள்ள தளங்களிலிருந்து 4,000 முதல் 5,000 அமெரிக்க விமானங்கள் புறப்பட்டுச் சென்றன. இவ்வாறு அவர் கூறினார். (நி)

## அமெரிக்கா சொன்னாலும் கேட்க மாட்டோம்
## இஸ்ரேல் அமைச்சர் பிடிவாதம்



(டெல் அவிவ்)

அமெரிக்கா வலியுறுத்தினாலும் லெபனானில் இருந்து தங்களது நாட்டு விமானப்படையை வாபஸ் பெற மாட்டோம் என இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - ஈரான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. அதன் ஒரு பகுதியாக லெபனானில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும். ஆனால், லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. இன்று நடந்த தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

இதனால், அமைதி ஒப்பந்தம் கேள்விக் குறியாகி உள்ளது. அந்நாட்டில் இருந்தும் இராணுவ வீரர்களை திரும்ப பெற மாட்டோம் என இஸ்ரேல் கூறி வருகிறது. இந் நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர், இஸ்ரேல் காட்ஸ் கூறியதாவது:

லெபனானின் தெற்கு பகுதியில் இருந்து இஸ்ரேல் இராணுவம், விமானப் படையை திரும்ப பெற்றுக் கொள்ள மாட்டோம். அமெரிக்கா கோரிக்கை வைத்தாலும், அந்தப் பகுதியில் இருந்து வீரர்கள் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள்.

இடம்பெயர்ந்த லெபனான் மக்கள் மீண்டும் மீள்குடியேற்றம் செய்யப்படமாட்டார்கள். 2 இலட்சம் பேர் மீண்டும் திரும்ப மாட்டார்கள். கடந்த காலங்களிலும் பாதுகாப்பு மண்டலங்களில் மக்கள் இருந்த போதும் வெடி குண்டுகள் வெடித்தன. இவ்வாறு அவர் கூறினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியாவில் வீதியோரத்தில் குப்பை கொட்டிய இருவருக்கு தண்டம்!

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், வீதியோரங்களில் சட்ட விரோதமான முறையில் குப்பைகளை வீசிய இருவருக்கு எதிராக பிரதேச சபையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வீதியோரங்களில் தொடர்ச்சியாகக் குப்பைகள் கொட்டப்பட்டு வந்த நிலையில், பிரதேச சபையினரால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்நிலையில், வீதியில் குப்பைகளை வீசிச் சென்ற இருவர் சிசிரிவி கமராவில் சிக்கியுள்ளனர்.

கமரா காட்சிகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட இருவருக்கும் எதிராக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கும் தலா 2000 ரூபாய் வீதம் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது

இது போன்ற பொது இடங்களை மாசுபடுத்தும் செயற்பாடுகள் தொடருமானால், இனிவரும் காலங்களில் தண்டப்பணத் தொகை மேலும் அதிகரிக்கப்படும் என பிரதேச சபை தெரிவித்துள்ளது. (8)

# மணலுடன் தப்பியோடிய டிப்பர் துரத்திப் பிடித்தது பொலிஸ்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தூர் - கொடிகாமம் வீதியில் மணலுடன் பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களை பொலிஸார் மறித்தபோது, இரண்டும் நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது.

இதையடுத்து பொலிஸார் துரத்திச் சென்ற நடவடிக்கையின் போது, ஒரு டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனம் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. தப்பிச் சென்ற மற்றொரு டிப்பர் வாகனம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி-பா- 3
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: A/L,பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்கள்
தொ.இ: B/16968

பிறப்பு:1998- NRC
உயரம் :5'6"
தகைமை/தொழில்-BA ,Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16970

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:ரோகினி 12இல் செவ்
கி-பா-18 3/4
உயரம் : 6'
தகைமை/தொழில் :BBM,Regional Manager(pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16974

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்: பரணி 7இல் செவ்
கி-பா-30 1/4
உயரம்:5'9"
தகைமை/தொழில்-MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்
தொ.இ: B/16976

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:பரணி
கி-பா :34 1/2
உயரம்:6'1"
தகைமை/தொழில்: Degree,Business
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16985

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்- ரோகினி 1 இல் செவ்
உயரம் -5'4"
தகைமை/தொழில்: BSC,Engineer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16979

பிறப்பு :1982-RC
நட்சத்திரம்:பரணி
உயரம் : 5'5"
தகைமை/தொழில் :MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்
தொ.இ: G/16980

பிறப்பு :1988-இந்து
நட்சத்திரம் :பூரட்டாதி
கி.பா :15 1/2
உயரம் :5'4"
தகைமை/தொழில்: BBM,Assistant Manager(Bank)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16981

பிறப்பு: 2000-இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி-பா:25
உயரம்: 5'2"
தகைமை/தொழில் : BSC(Software Engineer )
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16982

பிறப்பு :1999-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா-20
உயரம் :5'3"
தகைமை/தொழில்:College,Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16983

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 602



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இல்லாமல் இருத்தல்!

ஒரு பேராசிரியர்.அவர் ஒரு சமயம் ஒரு குருவைத் தேடி வந்தார். ஜப்பானிய குரு. அவர் பெயர் நான்-ன். அவருடன் பேச வேண்டும் விவரங்களைத் தெரிந்து கொள்ள வெண்டும் எனும் ஆசை. அந்த குரு ஒரு குடிசையிலே இருந்தார்.

இந்தப் பேராசிரியர் ரொம்ப தூரம் நடந்து அந்த குடிசைக்கு வந்து சேர்ந்தார்.

குரு பார்த்தார்.

"நீங்கள் மிகவும் களைப்பாக காணப்படுகின்றீர்கள். கொஞ்சம் இளைப்பாறுங்கள். உங்களுக்குத் தேநீர் தயார் செய்கின்றேன். தேநீர் குடித்து விட்டு அதற்குப் பின்பு நாம் கலந்துரையாடலாம்!" என்று சொல்லிவிட்டு தேநீர் தயாரிக்கிறதற்காக வெந்நீர் கொதிக்க வைத்தார். அதே சமயம் பேராசிரியரையும் லேசா கவனித்தார்.

ஒரு பக்கம் தண்ணீர் கொதிக்குது. இன்னொரு பக்கம் பேராசிரியரும் கொதித்துக் கொண்டிருக்கின்றார்.

தேநீர் பாத்திரத்திலேயிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கு. பேராசிரியரிடமிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கின்றது. ஏன் என்றால் அவர் தனக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தார்.அதாவது இந்த குருவிடம் என்ன கேட்பது.

எப்படி கேட்பது... எங்கேயிருந்து ஆரம்பிக்கிறது என்று தன்னைத் தானே தயார் செய்து கொண்டிருந்தார். அந்தப் பக்கம் தேநீரும் தயாராகி விட்டது.

அந்த குரு சிரிச்சிக்கிட்டே இதையெல்லாம் கவனிச்சார். அதன் பின்பு ஒரு கோப்பையிலே தேநீரை ஊற்ற ஆரம்பித்தார்.

பேராசிரியர் கோப்பையை கவனித்துக் கொண்டே இருக்கிறார். கோப்பை நிரம்பி வழிய ஆரம்பித்தது.

"நிறுத்துங்கள்" என்று கத்தினார் பொறுக்க முடியாமல் "கோப்பையிலே இனிமேல் கொஞ்சம் கூட ஊற்ற முடியாது. உங்களுக்கு என்ன ஆகிவிட்டது என்றார். இப்பொழுது அந்தக் குரு சொல்கிறார்.

இதே நிலைமையில் தான் இப்ப நீங்களும் இருக்கின்றீர்கள். நீங்களும் உங்கள் சொந்த கருத்துக்களாலும் எண்ணக் கோட்டைகளாலும் நிறைந்து இருக்கிறீர்கள்.. நீங்கள் உங்க கோப்பையை் காலி செய்யாத வரைக்கும் நான் என்ன? உங்களுக்குப் புதுசா கொடுத்துவிட முடியும்?" என்றார். கோப்பை நிரம்பிவிட்டது. இனிமேல் தாங்காது என்கின்ற தன்னைப் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இல்லை!

அவர் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள்...கோட்பாடுகள்... தத்துவங்கள் இவற்றால் நிரப்பப்பட்டு பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றது.

அதனாலே அந்த குரு என்ன சொன்னார் என்றால்

"நீங்கள் ஏற்கனவே அதிகம் அறிந்துள்ளீர்கள்.. நான் உங்களுக்கு எதையும் கொடுக்க முடியாது!" என்றார். "என்னைத் தேடி வருவதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கீங்க... வீணாக பிரயாணம் செய்து வந்திருக்கின்றீர்கள். நீங்கள் உங்க கோப்பையை கொஞ்சம் காலியா வைத்திருந்தால் நான் அதிலே கொஞ்சமாவது ஊற்ற முடியும்!" என்றார்.

"கோப்பையை காலி செய்" என்றால். "மனதைக் காலி செய்!" என்று அர்த்தம். ஏன்னா அங்கே நான் என்கிற ஆணவம் பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றது. ஆணவம் அங்கே இருக்கிற வரைக்கும் வேறு எதையும் அங்கே கொண்டு போய் சேர்க்க முடியாது. கோப்பையைக் காலி செய்... இல்லை என்றால் அதை வீசி எறிந்துவிடு என்கிறார் ஓஷோ.

கோப்பையை எறிந்துவிடு என்று சொன்னால் அதுக்குப் பொருள்... "நான் வெறும் புறமாக இருக்கிறேன் என்கிற உணர்வு கூட இல்லாமல் இருக்க வேண்டும்!" என்பதுதான். ஒருதடவை ஒரு சீடன் போதிதர்மரிடம் வந்தான் "குருவே...! நீங்கள் சொன்னீர்கள்...

என்னை வெறுமையா இருக்கச் சொன்னீர்கள். நான் இப்போது வெறுமையானவன் ஆகிவிட்டேன். நான் திரும்பவும் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டிருக்கிறான், போதி தர்மர் ஒரு கம்பை எடுத்தார். அவன் தலையிலே அடித்தார். அப்புறம் சொன்னார்:

"போய் அந்த வெற்றுத் தன்மையையும் எறிஞ்சுட்டு வா!" என்றார்.

"நான் காலியா இருக்கிறேன் என்றால் அதிலேயும் "நான்" இருக்கிறதல்லவா.

அந்த நான் காலியாக இருக்க முடியாது... ஆகவே நீ வெறுமையானவன் என்று கூற முடியாது!" - என்பது அவருடைய கருத்து. நம்ம ஆள் ஒருத்தன். ஒரு குருவிடம் போனான். "எதுவுமே இல்லாமல் காலியாக வர வேண்டும். அப்போது தான் உனக்குச் சொல்லிக் கொடுப்பேன்!" என்றார் குரு.

"அப்படித்தான் வந்திருக்கின்றேன்" என்றான்.


"சரி. முதலிலே குருதட்சணையை வை!" என்றார் அவர். "அதுவும் இல்லாமல் தான் வந்திருக்கின்றேன் குருவே!" அப்படி என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02 XXX

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

உலகம் முழுமையிலும் இருக்கக்கூடிய வன்மங்கள்-பழிவாங்கல்கள்-ஆக்கிரமிப்புக்கள்- போர் மூட்டம் கொண்ட சூழல்கள் என அனைத்திற்கும் பின்னணியாக இருப்பது **மதம்** என்பதை நாம் இங்கு எடுத்துரைப்பது கட்டாயமானதாகும்.

ஆம், அமெரிக்கா, இஸ்ரேல் -போன்ற நாடுகள் இன்றுவரை மத்திய கிழக்கு நாடுகள் மீது வன்மத்தோடு செயற்படுவற்கு மூலமாக இருப்பது மதமே.

இதனாலேயே இன்றுவரை சிலுவைப்போர் என்பது பேசுபடுபொருளாக உள்ளது.

உண்மை. உலகில் ஆதிக்கம் கொண்ட கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் மத வெறிகொண்டவர்களாகவே இன்னமும் வாழ்கிறார்கள்.

அவர்களிடம் மிகுந்த பொருளாதார பலம் இருந்தாலும் ஈவு, இரக்கம் என்பதில் அவர்களிடம் கடும் பஞ்சம் நிலவுகிறது.

இஸ்லாமியர்கள் என்பதற்காக காசா. மீது நடத்தப்பட்ட கொடும் போர் இந்த உலகில் சமயங்கள் படுதோல்வி கண்டுவிட்டதற்கான சான்றாகும்.

இதைவிட, மத்திய கிழக்கை ஆக்கிரமிப்பதற்கு அங்குள்ள எண்ணெய் வளங்களே காரணம் எனக் கூறப்பட்டாலும் இஸ்லாமிய மதத்தை அழித்தொழிக்க வேண்டும் என்பது கிறிஸ்தவ நாடுகளின் நிலைப்பாடாகும்.

இதுபோல கிறிஸ்தவ நாடுகளை அழித்து தனித்து இஸ்லாமிய மார்க்கத்தை நிலை நிறுத்த வேண்டுமென்பதே மத்திய கிழக்கு நாடுகளின் மனநிலையாய் உள்ளது.

ஆக, மதவெறி காரணமாகவே உலக யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

யுத்தத்தில் மனிதர்கள் உயிரிழக்கிறார்கள் என்ற வேதனை சம்பந்தப்பட்ட நாடுகளிடம் அறவே இல்லை.

மாறாக, இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் அழிக்கப்பட்டார்கள் எனத் திருப்திப்படுகின்ற அளவில் மிக மோசமான வக்கிரத்தனங்களே எங்கும் மலிந்தும் செறிந்தும் கிடக்கின்றன.

இதற்கான காரணங்களை தேடி ஆராய்கின்ற போது, குறித்த மதத்தவர்களிடையே இயல்பாக இருக்கக்கூடிய உயிர்க்கொலையே யாவற்றுக்கும் மூலகாரணமாக அமைகிறது.

ஆம். இஸ்லாமியர்கள் ஐந்து நேரத் தொழுகையில் மிகவும் உறுதியாக இருப்பார்கள். ஆனால் கோழி, ஆடு, மாடு, ஒட்டகம் உள்ளிட்ட உயிர்களைக் கொன்று குவித்து அவற்றை அவித்து உணவு மேசையில் அவற்றைக் கொட்டிப் பரவி, மாமிசத்தை உண்பது தான் அவர்களின் சமய வாழ்வு.

உயிர்க்கொலை பாவ காரியம் என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை.

இதேபோன்று கிறிஸ்தவ நாடுகளிலும் மிருகக் கொலைகளும் அவற்றின் இறைச்சியை உணவாக உட்கொள்கின்ற முறைகளும் தர்மமாக-புண்ணியமாகக் கருதப்படுகிறது.

ஆனால் சைவ சமயம் புலால் உண்பதை மறுக்கிறது. கூடவே மாமிச உணவுகளை அசைவம் என்கிறது.

ஆக, பிற உயிர்களைக் கொன்று மாமிச உணவுகளை உண்பது இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கும் போது, பிற உயிர்களை நிந்திக்காதே எனும் ஜீவ காருண்யம் அழிந்து போகிறது.

இதன் வெளிப்பாடாகவே மனிதக் கொலைகளும் வதைகளும் உலக நாடுகளில் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தாத விடயங்களாயிற்று.

இந்த இடத்தில் எம் தமிழினம் தொடர்பில் நாம் ஒரு முக்கியமான விடயத்தை இங்கு கூறியாக வேண்டும்.

ஆம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகள் உள்ளிட்ட விடுதலைப் போராட்ட இயக்கங்கள் எவையும் சமயம் சார்ந்து செயற்படவில்லை என்பது தான் அந்த முக்கியமான விடயமாகும்.



ஆம், ஏலவே குறிப்பிட்டது போல உலக நாடுகளில் நடக்கின்ற அத்தனை சண்டைகளுக்கும் அடிப்படைக் காரணமாக மதங்கள் இருக்க, எங்கள் ஈழத்திருநாட்டில் மட்டும் தமிழ் இனம் என்ற ஒரே இலக்கோடு விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதாவது எங்கள் விடுதலைப் போராட்டத்தில் மதம் என்பதற்கு இம்மியும் இடமிருக்கவில்லை.

அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 'மதம்' என்ற பேச்சுக்கு ஒரு போதும் இடம் தரவில்லை.

உண்மை. விடுதலைப் புலிகளின் முகாம்களில் மாவீரர்கள் மட்டுமே வழிபடு கடவுளாக இருந்தனர். மற்றும்படி அவர்களின் முகாம்களில் கடவுள் சிலைகள், உருவப் படங்கள் எதற்கும் இடமிருக்கவில்லை.

இது மட்டுமல்ல, ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றுகின்ற நடைமுறைகளும் அவர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

அதேநேரம் சிங்களப் படையினரின் முகாம்களில் கெளதம புத்தபிரானின் உருவச்சிலைகள் நிறுவப்படுவது கட்டாயமாயிற்று.

வெசாக் போன்ற புனித நாட்களில் ஒட்டுமொத்தப் படையினரும் வெள்ளை நிற ஆடை அணிந்து வரிசையாக விகாரைகளுக்குச் சென்று வழிபாடு செய்வதும் கட்டாய நடைமுறையாக இருந்தது.

இதற்கும் அப்பால், இராணுவத் தளபதிகள், படை உயரதிகாரிகள் விகாரைகளுக்குச் சென்று வழிபாடு செய்வதுடன் அவர்களுக்குப் புத்த பிக்குகள் பிரித்தோதி நூல் கட்டி விடுகின்ற பெளத்த கலாசாரங்களும் இடையறாது தொடர்ந்தன.

இதில் வேடிக்கையும் வினோதமும் என்னவென்றால், குறித்த ஒரு படை முகாமுக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதியாக ஒரு கத்தோலிக்க சிங்களவர் இருந்தாலும் அவரின் அலுவலகத்தில்-அந்த முகாமின் நுழைபுலத்தில் புத்தபிரானே எழுந்தருளியிருப்பார்.

தவிர, புத்தபிரானை வணங்கி விட்டே அந்த கத்தோலிக்க சிங்கள இராணுவ அதிகாரி தனது கடமையைச் செய்வார். இதுவே அவர்களின் நடைமுறையாக இருந்தது.

(திங்கள் தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1073





செய்வாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதைக் கேட்டு அனைவரும் திகைத்துப் போனார்கள்.

இளையபிராட்டி கோபமும் பரிதாபமும் கலந்து பொங்கிய குரலில், "பெண்ணே! இது என்ன சபதம்? எதற்காகச் செய்தாய்? இப்படியும் ஒரு மூடத்தனம் உண்டா? ஏதோ வெறி பிடித்தவள் போல அல்லவா பிதற்றிவிட்டாய்?" என்றாள்.

"இல்லை, அக்கா! இல்லை! எனக்கு வெறி இல்லை. என் அறிவு தெளிவாயிருக்கிறது. பல நாளாக யோசித்து என் மனத்திற்குள் முடிவு செய்து வைத்திருந்ததையே இப்போது பலர் அறியக் கூறினேன்" என்றாள் வானதி.

அதற்குக் குந்தவை மறுமொழி சொல்வதற்குள் பூங்குழலியின் சிரிப்பு அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே இப்போது வெறி பிடித்துவிட்டது போலத் தோன்றியது. முதலில் கலகலவென்று சிரித்தாள். பிறகு முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பின்னர் திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு மெல்லிய குரலில்,

"அலைகடலும் ஓய்ந்திருக்க அகக்கடல்தான் பொங்குவதேன்?" என்று பாடத் தொடங்கினாள்.

குந்தவை ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "இந்த இரண்டு பெண்களும் சேர்ந்து என் மனத்தையும் குழப்பிப் பைத்தியமாக்கி விடுவார்கள் போலிருக்கிறது. திருமலை! இளவரசரைப் பார்க்கப் புறப்பட்டவன் இவளை எதற்காக இங்கு அழைத்துக்கொண்டு திரும்பி வந்தாய்?" என்று கேட்டாள்.

"தேவி! பொன்னியின் செல்வரைச் சந்திப்பதற்குத்தான் புறப்பட்டுச் சென்றேன். வழியெல்லாம் ஒரே வெள்ளமாயிருந்தபடியால் போக முடியவில்லை. என்னைப் போலவே இவளும் தடைப்பட்டு நின்றதைப் பார்த்தேன். படகு சம்பாதித்துக் கொடுத்தால் தள்ளிக்கொண்டு போய்த் திருவாரூர் சேர்ப்பதாகச் சொன்னாள். அதற்காக ஜோதிடரிடம் திரும்பி வந்தேன். கோயிலுக்குப் பக்கத்தில் தங்கள் ரதப் படகைப் பார்த்ததும் சந்தோஷமாயிற்று.

தங்களிடம் கேட்டுப் படகு வாங்கிச் செல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் பழுவேட்டரையர் ரதத்தோடு படகையும் கொண்டு போய் விட்டார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இப்போது என்ன யோசனை சொல்கிறாய்? பழுவேட்டரையர் கூறியதையெல்லாம் நீயும் கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா? " என்றாள் குந்தவை.

"ஆம் தாயே! அதைக் கேட்ட பிறகு இங்கே வீண் போகும் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றுகிறது.

பொன்னியின் செல்வர் இந்தக் கண்டத்திலும் தப்பிப் பிழைத்தாரானால், அவர் மனமுவந்து என்னைக் கரம் பிடித்து மணந்து கொண்டாரானால், அத்தகைய பெரும் பேறு எனக்குக் கிடைத்ததானால், தஞ்சை அரண்மனைச் சிம்மாதனத்தில் நான் ஒருநாளும் உட்காரவே மாட்டேன் இது சத்தியம்! சத்தியம்!"

### அத்தியாயம் 15
### கூரை மிதந்தது!

அச்சந்தர்ப்பத்தில் கொடும்பாளூர் இளவரசி இம்மாதிரி ஒரு சபதத்தைச்

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## இளவரசி தேவயானி



(நேற்றைய தொடர்ச்சி)

பக்கத்து நாட்டு அரசனோடு மன்னருக்கு ஒரு பிணக்கு இருந்தது. அவன் அவர்கள் நாட்டின் கனிமவளம் நிறைந்த ஒரு பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேற மறுத்தான்.

அவனிடம் இழந்த நிலப்பரப்பை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு அவன் மீது போர் தொடுக்க வேண்டும். அந்தப் போர் இளையவன் தலைமையில் நடைபெற வேண்டும். கண்டிப்பாக அவன் வெற்றி பெறுவான்.

இதனால் அவன் கீர்த்தி (புகழ்) பல மடங்கு பெருகும். அந்த வெற்றியை முன்வைத்தே அவனுக்கு மகுடம் சூட்டி விடலாம். மூத்தவன் இருக்க இளையவனுக்கு முடி சூட்டுவதா என்ற அதிருப்தியும் மக்கள் மத்தியில் பெரிய அளவில் எழாது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதாகக் கணக்குப் போட்டார் மன்னர்.

போர்ப் பிரகடனம் செய்வதற்கு முன்னால் போர் யுக்திகள் குறித்து விவாதிப்பதற்காக இரகசியக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார் மன்னர். உயர்மட்ட அமைச்சர்கள், ஆலோசகர்கள் மட்டுமே கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் திடீரென்று எங்கிருந்தோ பிரசன்னமானாள் தேவயானி.

தேவயானியைக் கண்டதும் மன்னர் எரிச்சலுற்றார். அவளை அங்கிருந்து அப்புறப்படுத்தும்படி மெய்க்காப்பாளருக்கு உத்தரவிட்டார். [illegible] எப்படி வெளியேற்றுவது என்று அவர்கள் தயங்கி நின்றனர். குமரகுருபரர் மன்னரின் அவையில் கொலு வீற்றிருக்கும் மூத்த அறிஞர். மருத்துவம் வானவியல் என்று பல்வேறு துறைகளில் பாண்டியத்துவம் பெற்றவர். மன்னரின் ஆலோசகரும் கூட. அவரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார். மன்னர் யாரையும் கலந்தாலோசிக்காமல் எடுத்த முடிவை அவர் விரும்பவில்லை. அவர் மன்னரிடம் இடித்துரைத்தார். மன்னர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இப்போது பேசினார்.

"மன்னா, தேவயானி ஏதோ சொல்ல விரும்புகிறார். அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தான் கேட்போமே?" என்றவர் அவளைப் பார்த்து கண் குறிப்பு காட்டினார்.

தேவயானி பேச ஆரம்பித்தாள். "மன்னா, எதிரி நாட்டு அரசன் சிற்றரசன் தான். தாங்கள் அவனைக் கண்டிப்பாக போரில் வென்று விடுவீர்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

வாய்ப்புக்காக காத்திருக்காதே.
உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.
– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராவணனை வீழ்த்திய நாரதர் போல ஆளுநருக்கும் யாரேனும் வாய்த்தனரோ

முப்பத்து முக்கோடி தேவர்களையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் என இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் விரும்பினான்.

அஃது நடப்பதாக இருந்தால், நவக்கிரகங்கள் எங்கெங்கு இருக்க வேண்டும் என வேத சாஸ்திர விற்பன்னர்களுடன் கலந்துரையாடினான்.

எனினும் அவனுக்குச் சரியான ஆலோசனை கிடைக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் இராவணன் நாரத முனியைச் சந்திக்கின்றான்.

தன் விருப்பத்தை நாரதரிடம் எடுத்துக் கூறி, முப்பத்து முக்கோடி தேவர்களையும் எனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொருட்டு நவக்கிரகங்களை ஒழுங்குபடுத்துவது எப்படி எனக் கேட்கின்றான்.

இராவணனின் அபரிதமான போக்கை உணர்ந்த நாரதர்; இராவணனின் இச்சிந்தையால் தேவர்கள் துன்பப்படும் வாய்ப்பு உண்டு. ஆகையால், இதற்கோர் முடிவு கட்ட வேண்டும் என முடிவு செய்தார்.

இராவணேஸ்வரனின் சிம்மாசனப் படிகள் ஒன்பது. அந்த ஒன்பது படிகளிலும் ஒன்பது கிரகங்கள். இதில் எட்டாவது படியில் சனீஸ்வரன். அதுவும் படியைப் பார்த்தவாறு முகக் குப்புறக் கிடக்கின்றார்.

இப்போது நாரதர் இராவணனுக்கு ஆலோசனை கூறுகிறார். இராவணா! உன் சிம்மாசனப் படிகளில் எட்டாவது இடத்தில் சனீஸ்வரன் உள்ளார்.

இதுகாறும் அவர் முகக்குப்புறக் கிடக்கிறார். இனிமேல் அவரை நீ நிமிர்த்தி அவரின் நெஞ்சில் உன் காலை வைத்துப் படி ஏறுக! அவ்வாறு செய்தால், நீ நினைத்தது நடக்கும் என்றார்.

அவ்வளவு தான். நாரதரின் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளாத இராவணன் தன் சிம்மாசனத்தின் எட்டாவது படியில் குப்புறக்கிடக்கும் சனீஸ்வரனை நிமிர்த்திக் கிடத்தி, அவரை மிதித்த போது எட்டாமிடத்து சனீஸ்வரன் இராவணனைப் பார்க்கிறார்.

பிறகென்ன, **வாரணம் பொருத மார்பு, வரையினை எடுத்த தோள், நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நா, தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு நிற்கிறான் இலங்கை வேந்தன்.**

அது சரி, இப்போது இந்தக் காதை எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் காரணத்தோடு தான்.

எங்கள் வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில், வவுனியா மாநகர சபை முதல்வர் மற்றும் சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஆகியோரின் பதவிகள் வெறிதாக்கப் பட்டுள்ளன. மேற்போந்த சம்பவம் இப்போது பேசுபடுபொருளாகியுள்ளது.

தவிர, நாமல் ராஜபக்ஷவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவில் நிலைமை வந்துற்றது. இப்போது நாமல் ராஜபக்ஷவின் எதிர்ப்புப் பற்றி நமக்கு எந்தக் கவலையும் இல்லை.

மாறாக, இராவணனுக்குக் கிடைத்த நாரதர் போல நம் வடக்கு ஆளுநருக்கும் யாரேனும் நாரதர் கிடைத்தனரோ என்பது தான் நம் கவலையெல்லாம்.

## மாந்தை கிழக்கு பிரதேச சபை அமர்வில் பலத்த வாதப் பிரதிவாதங்கள்

### தவிசாளருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முயற்சி

(மாந்தை)

மாந்தை கிழக்கு பிரதேச சபை அமர்வில் பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதோடு தவிசாளருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முயற்சித்ததால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அமர்வானது நேற்று சபையின் தவிசாளர் செல்வி இராசையா நளினி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உப தவிசாளர் சத்தியமூர்த்தி சத்தியவரதன் அவர்களால் தவிசாளருக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டு பெரும் விவாதமாக மாறியது.

பிரதேச சபை உறுப்பினர்கள் யாருக்கும் அறிவித்தல் வழங்கப்படாது, பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படாது பிரதேச சபையின் சொத்துக்களை ஏலம் விட்டமை தவறு, வடமாகாணமென்பந்து போட்டி பாலிநகரில் நடைபெற்ற போது தண்ணீர் வழங்குவதற்கு இடையூறாக இருந்தார். மாற்று வழியாக துணுக்காய் பிரதேச சபையிலிருந்து தண்ணீரை பௌசரில் கொண்டு வரும்போது தவிசாளர் வாகனத்தில் சென்று தண்ணீரை கொண்டு செல்ல விடாது வழிமறித்தார். வாகனங்களுக்கு எரிபொருள் வீண்விரயம் செய்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தவிசாளருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதாக கூறினார்.

இதன்போது தவிசாளர் பிரேரணையை எதிர்ப்பதாகவும் அது உள்ளூராட்சி சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்புடைய பிரேரணை இல்லை என்றும் அதனை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது உப தவிசாளர் இதற்கு முன்னர் இடம்பெற்ற கூட்டத்தில் தனக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்த போது அதனை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. உபதவிசாளருக்கு எதிராக வரும்போது சட்டத்தில் இடமுள்ளது. தவிசாளருக்கு எதிராக வரும்போது சட்டத்தில் இடமில்லை என்றால் எவ்வகையில் அது நியாயம். இதனை ஏற்றுக் கொள்ள முடியாதென வும் விசாரணைக்குட்படுத்த வேண்டும் எனவும் தவிசாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார்.

இதன்போது பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்ற போது சபையில் அமளி துமளி இடம்பெற்றிருந்தது.

(ம-7,299)

## போசாக்கு விழிப்புணர்வு நடைபவனியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் 2026 ஆம் ஆண்டிற்கான போசாக்கு விழிப்புணர்வு சம்பந்தமான நடை பவனியும் கண்காட்சியும் இன்று(26) வெள்ளிக் கிழமை நடைபெறும்.

நடைபவனி காலை 8 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் ஆரம்பித்து கரவெட்டி பிரதேச சபையில் நிறைவடையும் சிறுவர் நிகழ்வுகளும் கண்காட்சியும் காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை நடைபெறும். (ம-7)

## ஒக்டோபர் மாதத்தில் 2,847 தாதியர்களை நியமிக்க நடவடிக்கை

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 2,847 தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாதியர் பயிற்சிப் பாடசாலையின் 2021 ஆம் ஆண்டு அணியைச் சேர்ந்த மாணவத் தாதியர்களுக்கு தொப்பி அணிவித்தல் மற்றும் சேவைக்கான அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2028 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 1,949 பேருக்கும் ஓகஸ்ட் மாதத்தில் 2930 பேருக்கும் நியமனங்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் 2030 ஆம் ஆண்டளவில் தாதியர் சேவைக்காக 13,600 பேரை ஆட்சேர்ப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதோடு அந்த இலக்கில் 50% ஐ இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாதியர் சேவையில் இணையும் அனைவரதும் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் குறைந்த பட்ச வசதிகளுடன் இயங்கி வரும் தாதியர் பயிற்சிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ம-7)

## கிஷோரின் பதவி நீக்கத்தைக் கண்டித்து

### சாவகச்சேரி வர்த்தகர்கள் இன்று கதவடைப்பு

சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா.கிஷோரை பதவியிலிருந்து நீக்கியதனைக் கண்டித்தும் - எதிர்ப்புத் தெரிவித்தும் நீதியான தீர்வு கிடைக்க வலியுறுத்தியும் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வர்த்தகர்கள் முழு கதவடைப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

மண்ணின் நீதிக்காக இன, மத, மொழி பேதங்களைக் கடந்து சாவகச்சேரியின் அனைத்து வர்த்தக பெருமக்களும் தங்களது கடைகளை முழுமையாக மூடி இந்த அறப்போராட்டத்திற்கு பேராதரவு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,30)

## இந்திய கடவுச்சீட்டுடன் இலங்கைப் பெண் சென்னையில் கைது

இந்திய கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்கு வர முயன்ற இலங்கை பெண்ணொருவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து கடந்த செவ்வாய்க் கிழமை பெண் ஒருவர் இலங்கை வருவதற்கு முயன்றார்.

அவரது கடவுச்சீட்டை விமான நிலையத்தில் வெளிநாட்டவர் பதிவு மண்டல அலுவலர் ஆய்வு செய்தார்.

அப்போது, அந்த பெண் கடந்த 2001ம் ஆண்டு இலங்கை கடவுச்சீட்டு மூலம் இந்தியா வந்தது தெரியவந்தது. தற்போது இந்திய குடியுரிமை பெற்ற பெண் போல் இந்திய கடவுச்சீட்டு மூலம் மீண்டும்இலங்கைக்கு செல்ல முயன்றதும் தெரியவந்தது.

அதை தொடர்ந்து வெளிநாட்டவர் பதிவு மண்டல அலுவலர் அந்தப் பெண்ணை சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணை நடத்திய போது அவர் இலங்கையைச் சேர்ந்த 58 வயதான மெரினா ஆனி என்றும் கடந்த 2001ம் ஆண்டு இலங்கை கடவுச்சீட்டு மூலம் இந்தியா வந்ததும், அதன் பிறகு குவைத் சென்று பின்னர் 2003ம் ஆண்டு விருதுநகரை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொண்டு மீண்டும் இந்தியா வந்து விருதுநகரில் குடியேறியுள்ளார்.

பின்னர் மெரினா ஆனி தான் இந்திய குடியுரிமைப் பெண் போல் இந்திய ஆவணங்களான ஆதார் கார்டு, பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை பெற்று தன்னை இலங்கை பெண் என்பதை மறைத்து இந்திய கடவுச்சீட்டு பெற்று சொந்த நாட்டிற்கு செல்ல முயன்றது தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் வேலைவாய்பு போட்டி பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் வடமாகாணத்தில் பல வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அவற்றுக்கு பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரியும், அரசாங்கத்தால் மேற்கொள் எப்படும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என கோரியுமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமக்கான தீர்வுகள் கிடைக்க பெறாமல் விடின் எதிர்காலத்தில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தனர். (8-33)



யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் மாணவர்த் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலையின் ஆ.சி.நடராசா மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந் நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 130 | 200 | 150 | 200 | 160 | 130 |
| உருளைக்கிழங்கு | 180 | 210 | 200 | -- | 240 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 550 | 600 |
| தக்காளி | 850 | 800 | 800 | 620 | 800 | 850 | 680 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 250 | 150 | 200 | 200 | 140 |
| கோவா | 250 | 250 | 350 | 250 | 250 | 250 | 200 |
| கரட் | 350 | 400 | 500 | 380 | 400 | 400 | 330 |
| பூசணி | 120 | 120 | 150 | 100 | 160 | 130 | 120 |
| புடோல் | 140 | 160 | 200 | 200 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 | 200 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 400 | 400 | 200 | 330 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1200 | 2000 | 1500 | 1800 | 1600 | 1000 | -- |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 250 | 400 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 300 | 400 | 400 | -- | 380 |
| பயற்றங்காய் | 300 | 250 | 600 | 450 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 400 | 400 | 400 | 350 | 380 | 400 | 330 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 400 | 500 | 600 | 480 |
| கறிமிளகாய் | 450 | 500 | 600 | 500 | 400 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 2000 | 600 | 600 | 1100 | 900 |
| போஞ்சி | 650 | 500 | 600 | 600 | 500 | 500 | 510 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | -- | 160 | -- | -- |
| கீரை - 1 பிடி | 50 | 60 | 50 | 80 | 80 | -- | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 450 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 140 | 100 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 500 | 420 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 200 | 150 | 200 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | -- | 100 | -- | 50 |
| ஈரப்பலா | -- | -- | 120 | -- | -- | -- | -- |

# இராசிபலன்

26.06.2026
ஆனி 12, வெள்ளிக்கிழமை
துவாதசி பின்னிரவு 12.14 மணிவரை

விசாகம் முன்னிரவு 9.30 மணிவரை
சுப நேரம் -5.55-7.25 மணிவரை
இராகு காலம் -10.25-11.55 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரேவதி,அச்சுவினி.

வளவன்

**மேஷம்** உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, மனக் கிலேசமுண்டு.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவுகள் இல்லம் தேடி வரலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** ஆடம்பரப்பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கூடும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** நல்லவர்களின் ஆதரவும், அறிவுரையும் கிடைக்கும், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** காலைநேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**கன்னி** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நேற்றைய பணியொன்று இன்னும் தொடரலாம், வழிபாட்டால் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** ஊர் மாற்றம், இட மாற்றம் என்பன இடம் பெறலாம்,வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

அமராமல் உழைப்பவனே உண்மையான மேதை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 17 வயது...

முன்தினம் இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பிரசாந் சச்சின் (வயது - 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த கலைஞர் நேற்று முன்தினம் புங்குடுதீவு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு தவில் கச்சேரிக்கு சென்று வந்துள்ளார். அதன்பின்னர் அச்சுவேலிப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் தவில் கச்சேரி இருந்த நிலையில் அவர் அங்கு செல்லவில்லை.

அதன்பின்னர் நேற்று முன்தினம் இரவு விபரீத முடிவெடுத்து தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

குறித்த கலைஞர் தனது 8 வயதில் தவில் வாசிக்க ஆரம்பித்த நிலையில் தற்போது 17 வயது ஆகின்ற நிலையில் தனது கலை திறமையால் பலரது நெஞ்சங்களில் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60,104)

## இலவசமாக...

அவர்களின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், இலங்கையிலேயே முதல் தடவையாக அரச மருத்துவமனையொன்றில் செயற்கை முறை கருக்கட்டல் சேவையை முழுமையாக இலவசமாக ஆரம்பித்தமைக்காகத் தனது விசேட பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, குறித்த செயற்றிட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத் தேவைகள் குறித்துப் பேராசிரியர் ரகுராமன் விரிவாக விளக்கமளித்தார்.

மாதமொன்றுக்கு 10 தொடக்கம் 15 ஐ.வி.எவ். சிகிச்சை சுழற்சிகளை இலக்காகக் கொண்டு செயற்படுவதற்கும் சேவையைத் தடையின்றித் தொடர்வதற்கும் அவசியமான நான்கு பிரதான விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆழமாக ஆராயப்பட்டன.

தற்போதைய நிலையில் இரண்டு தாதிய உத்தியோகத்தர்களும் ஒரு இணைப்பாளர் மற்றும் ஒரு கருத்தரிப்பு உதவியாளரும் சேவையாற்றுகின்றனர். சேவையை விரிவாக்கும் நோக்கில், மாதத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் சூல்முட்டை சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு மருத்துவ அதிகாரியும் மயக்கமருந்து நிபுணருக்கு உதவுவதற்காக மேலதிகமாக ஒரு தாதிய உத்தியோகத்தரும் சத்திரசிகிச்சைக் கூடத் தயாரிப்புகளுக்காக இரண்டு சுகாதார உதவியாளர்களும் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குரிய ஒழுங்குகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆளுநர் உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ஒரு நோயாளிக்கான ஆய்வுகூட மற்றும் மருத்துவப் பொருட்களுக்கான செலவு சுமார் 130,000 ரூபாவாகவும் தூண்டுதல் மருந்துகளுக்கான செலவு சுமார் 120,000 ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக ஒரு நோயாளிக்கு 250,000 ரூபா செலவாகின்ற நிலையில் மாதமொன்றுக்கு அதிகபட்சம் 15 நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க சுமார் 4 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள், கொள்வனவு நடைமுறைகளில் உள்ள சவால்களைத் தீர்க்கும் வழிமுறைகள் மற்றும் நன்கொடைகளை மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக எவ்வாறு வெளிப்படைத்தன்மையுடன் கையாள்வது என்பது குறித்தும் ஆராயப்பட்டது. (ம-7)

## வெனிசுலாவில்...

வெனிசுலாவில் ஏற்பட்ட இரட்டை நிலநடுக்கங்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 188 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டின் பதில் ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 1500 பேர் காயமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் (USGS) படி, மொண்டல்பான் பகுதியில் இருந்து 13.2 கிலோமீற்றர் ஆழத்தில் ரிக்டர் அளவுகோலில் 7.1 ரிக்டர் அளவாக குறித்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. (ம-7)

(முன்னர் வந்த செய்தி உள்ளே...)

## அமெரிக்காவில்...

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள பல குற்றவாளிகள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். விரைவில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்படுவர்கள்.

நாட்டில் இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் எனப் பல குற்றவாளிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பலருக்கு விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பலர் மீதான வழக்குகள் உள்ளன. சிலருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் தேவையுடையவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தங்களுக்கான வழக்குகளை தொடர முடியும். ஆனால் பலர் இங்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பதுங்கிக்கொள்கின்றனர்.

இங்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு, பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, பின்னர் சிவப்பு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்ட ஒருவர் அமெரிக்காவில் சென்று பதுங்கியிருக்கின்றார். நிச்சயம் அவர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு கைது செய்யப்படுவார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஜனாதி...

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் இலங்கைக்கு பிரெஞ்சு முதலீடுகளை ஈர்ப்பது ஆகிய விடயங்கள் குறித்து முக்கியமாக கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த விஜயத்தின் முக்கிய அம்சமாக, உலகின் மிகப்பெரிய கடல்வழிப் போக்குவரத்து மற்றும் தளபாட நிறுவனங்களில் ஒன்றான CMA CGM இன் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ரொடால்ப் சாடேயுக்கும் ஜனாதிபதி அநுரவுக்கும் இடையிலான சந்திப்பு அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## பயங்கரவாதத்...

குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் தமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி இந்த அடக்குமுறைச் சட்டத்தை நீக்கிவிட்டு ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் புதிய சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மை இலக்கு என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 6229
G 5 4 6 7 8 2
அத சம்பத G 6 7 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 0804

சுப தவசக்
திகதி 2026.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 8345
துலாம் 28 36 51 8532

தன நிதானய
திகதி - 2026.06.25
சீட்டிழுப்பு இலக்கம் - 2259
I 02 17 27 43 I

மெகா பவர்
திகதி 25/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2577
U 16 03 59 72 77

NLB ஜய
திகதி 2026.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 0497
K 5 8 2 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4471
சீட்டிழுப்பு திகதி | 25.06.2026
V 07 13 67 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 1538
மேடம் 01 36 45 48 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
25.06.2026
சீட்டிழுப்பு வாரம் 0937
F 9 4 4 1 3 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,395,074.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3203
25000 பணப் பரிசு 53157
சீட்டிழுப்பு திகதி 2026.06.25
தினம் வியாழக்கிழமை
22 47 53 61 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,676,368.80

சனிதா
திகதி 25.06.2026 வெற்றி வாரம் 5364
11 23 41 60 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,041,935.20
95758

சசிரி
வெற்றி வாரம் 1033
சீட்டிழுப்பு திகதி 25.06.2026
வியாழக்கிழமை
10 35 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,921,720.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4915
சீட்டிழுப்பு திகதி 25.06.2026
தினம் வியாழக்கிழமை
11 29 58 61
மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,671,386.00

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 20 05 57 65 71
2379
25.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.302,263,967.00

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 3029
சீட்டிழுப்பு திகதி 2026.06.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,373,213.60
10 25 29 30 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E.(O/L) க.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2026

(வட மாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் நடைபெறவுள்ளது)

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 05.08.2026 புதன் | சாவகச்சேரி கலாசார மண்டபம், சாவகச்சேரி சிவன் கோவிலடி | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 06.08.2026 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி அரங்கம், வட்டுக்கோட்டை | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 07.08.2026 வெள்ளி | ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பனிமனை | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 08.08.2026 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 09.08.2026 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் மற்றும் பெண் இருபாலாரும் ) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 10.08.2026 திங்கள் | மன்னார் நகர சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 11.08.2026 செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபம் (கிளிநொச்சி தெற்கு வலய மாணவர்களுக்கு) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 12.08.2026 புதன் | கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபம் (கிளிநொச்சி வடக்கு வலயம் மற்றும் துணுக்காய் வலய மாணவர்களுக்கு) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 13.08.2026 வியாழன் | குயின்ஸ் பேலஸ், மாஞ்சோலை, தண்ணீரூற்று | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 14.08.2026 வெள்ளி | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப 08.30 – பி.ப 02.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E.(O/L) கடந்தகால வினாவிடைத்தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

**குறிப்பு : மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.**

அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவும்.

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1. திரு.வேலாயுதன் தேவசேனாதிபதி L.L.B(சிரேஷ்ட சட்டத்தரணி), தலைவர் - EDCC (தொ.பே : 0771133400)
2. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை தொ.பே: 0773850841
3. திரு.கந்தசாமி சக்திதரன், பொது செயலாளர் EDCC, இலங்கை, தொ.பே 0770703360
4. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) தொ.பே: 0773144527
5. Mr.Vijasundaram Ramnath, Coordinating Secretary of Hon.,MP.M.Jegatheeswaran
6. கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் B.A, செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தென்மராட்சி.
7. திரு.சூசை. ஜெபநேசன் தென்மராட்சி இணைப்பாளர். தொ.பே: 0771678150
8. P.கமலதாசன் (அதிபர் – யாழ்.ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்) – தேசிய ரீதியான வளவாளர், தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கம் இணைப்பாளர் யாழ்ப்பாணம். தொ.பே: 0771116739
9. திரு.S.மணிமாறன் (ஆசிரியர் – யா/யாழ்.மத்திய கல்லூரி)

**இணை அனுசரணை கல்விக் காருண்ணியன் E.S.P. நாகரட்ணம் ஐயா (கஜமுகன் ஹாட்வெயர்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 2833**

(C-5922)



# A/L - வரலாறு

மாவட்ட, தேசிய சாதனை மிக்க பெறுபேறுகளை உருவாக்கிய, உருவாக்கும் உங்கள் ஆசிரியர்

**M. பத்மன்** B.A (Hons) History, P.G.D.E, M.E.D (OUSL), M.A (History)

- **A/L - 2k28** புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
- **A/L - 2k27** புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**கற்பிக்கும் இடங்கள்**

D. M. I ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

BITSMANS மானிப்பாய்.

நியூ ஸ்ரான் சுன்னாகம்.

உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில்.

தொடர்புகளுக்கு: 077 482 5587

(C-5921)



# DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2028**

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 27.06.2026 காலை 8.00 மணி (சனி)

நிர்வாகம் : 0777789815

(C-5917)


## குற்றங்கள்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவே மக்கள் எனக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். சட்ட நடவடிக்கைகளை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட வேண்டாம்.

ஊழல், படுகொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்கும் அரச அதிகாரிகளை எதிர்க்கட்சியினர் எதிரிகளாகவே பார்க்கிறார்கள். கடந்தகால ஊழல், படுகொலைகளின் பிரதான பங்காளிகளாகவே எதிர்க்கட்சியினர் உள்ளனர். இதுதான் உண்மை.

“லசந்த விக்கிரமதுங்க எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்? ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களின் பின்னணியில் அரச ஆதரவு உள்ளது. தாஜுதீன் படுகொலை, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் பின்னணியில் அரச அதிகாரம் உள்ளது. இதனை வெளிப்படுத்தக் கூடாதா?

நாட்டு மக்கள் எவரும் விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. குற்றவாளிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் தான் திட்டமிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். எத்தனை கூடாரமிட்டு போராடினாலும் விசாரணைகளை நிறுத்த போவதில்லை என்றார். (ம-7)


# மணப்பெண் தேவை

01. உரும்பிராய் - அச்சுவேலி,இந்து, 1991, பூரம், Phd, MSc in Software Engineering, Researcher, Norway citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57168)
02. அளவெட்டி - வட்டுக்கோட்டை, இந்து, 1992, மகம், MSc in Project Management, Bussiness Managing Director, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54213)
03. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், BSc Engineering (Australia) Engineer, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55831)
04. சிறுப்பிட்டி - நீர்வேலி, இந்து, 1994, கேட்டை, BBA, ACCA PGDP in Strategic Management, Accountant, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57140)
05. புங்குடுதீவு, இந்து, 1995, பரணி, Bsc, Bio Medical Science, HR in IT, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49598)
06. அராலி - கைதடி, இந்து, 1996, பூசம், Bsc (Hons) in Quanity Surveying University of Moratuwa, Quantity Surveyor Dubaiமாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57521)
07. சுண்டுக்குளி -ஏழாலை Roman Catholic, 1991, மகம், Bachelor in Mechanical Engineering (University of Peradeniya) Engineer, Consultant, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57196)
08. சுன்னாம் - அச்சுவேலி, இந்து, 1992, பரணி, Electronic Engineering, Electronic Engineer, Switzerland citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53671)
09. மூளாய் - மானிப்பாய், இந்து, 1988, பரணி, Doctrate in Finance Managent, Bank Manager & Lecture, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43978)
10. கொக்குவில், இந்து, 1989, சதயம், BSc (Hons) Quantity Surveying (University of Moratuwa) Coast Engineer, Qatarமாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54656)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(C-5920)

S.Sharma J.P www.thaalee.com 077 539 3728 074 359 3104



# சதாபொன்ஸ் கல்வி நிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)

மாலுசந்தி அல்வாய்

**O/L மீட்டல் வகுப்புக்கள்**

ஆரம்பம்

25.06.2026 வியாழக்கிழமை காலை 8.00 மணி

தொடர்புகளுக்கு : 077 309 5176, 076 126 0105, 021 226 3206

(C-5916)



# பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்
ஒவ்வொரு பகிர்வுக்கும் பின்விளைவுகள் உள்ளன.

வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டும் தகவல்களை உணர்ச்சிவசப்பட்டோ அல்லது திட்டமிட்டோ பகிர்வது கோபத்தையும் வன்முறையையும் அதிகரிக்கிறது.

இத்தகைய பெரும்பாலான கட்டுக்கதைகள் மக்களின் உணர்வுகளை தன்நலத்திற்காக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டு மறைமுக அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பரப்பப்படுகின்றன.

**நிறுத்துங்கள், சிந்தியுங்கள், உறுதிப்படுத்துங்கள்**
வெறுப்பின் கருவியாக மாறாதீர்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது.

(7775)



# கடை அல்லது காணி வாடகைக்கு தேவை

பலாலி வீதியில் உரும்பிராய் சந்திக்கும் யாழ்.வேம்படிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வியாபாரம் செய்வதற்கு பொருத்தமான கடை அல்லது காணி வாடகைக்கு தேவை

(7918)

தொடர்புக்கு 076 197 4136



**A/L 2028 மாணவர்களுக்கு...**

யாழ் நகரில்...

புவியியல் பாட வகுப்புக்கள் நடைபெறும் நிறுவனம்

DMI ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம்) யாழ்ப்பாணம்.

– ஆசிரியர் – N.BABU (சனி, ஞாயிறு – 8am)

ஆரம்பம் : 27.06.2026 (சனி – 8am)

T.P : 077 936 5087

(C-5913)





# ஏழாலை மாதிரை ஞான வைரவர் ஆலயம்

## வருடாந்த பொங்கல் விழா

விளக்கு வைப்பு 19.06.2026 வெள்ளிக்கிழமை

திருக்கதவு திறப்பு 26.06.2026 வெள்ளிக்கிழமை

பொங்கல், தீமிதிப்பு, அன்னதானம் 27.06.2026 சனிக்கிழமை

இங்ஙனம் ஆலய நிர்வாக சபை

(C-5923)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 26.06.2026